1973 நவம்பர் 20]

வ. உ. சிதம்பரனார் குடும்பத்திற்குத் தனி ஓய்வூதியம்

* 200 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வ. உ. சிதம்பரனார் குடும்பத்திற்கு நிதி உதவி அளிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். மறைந்த திரு. வ. உ. சிதம்பரனாரின் மகள் திருமதி ஆனந்தவல்லி அவர்களுக்கும், மூத்த மகன் திரு. வ. உ. சி. ஆறுமுகம் அவர்களுக்கும் முறையே 20—10—1972, 1—10—1973-லிருந்து தமிழ்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வு ஊதியம், தனிச் சலுகையாக, மாதம் ரூ. 75 வீதம் வழங்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் அவர்களுடைய இல்லத்தினை அரசே ஏற்றுக்கொண்டு நினைவுச் சின்னமாக உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே அது நினைவுச் சின்னமாகத்தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இந்தத் தியாகிகளுக்குக் கொடுக்கப்படும் மானியம் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கிறதா ? அல்லது, வித்தியாசம் இருக்கிறதா ? வித்தியாசம் இருக்குமானால், கூடுதல் எவ்வளவு, குறைவு எவ்வளவு என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லாருக்கும் ஒரே மாதிரியாகத்தான் தரப்படுகிறது.

தமிழில் கல்லூரிப் பாட நூல்கள்

* 201 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிப் பாடநூல்களைத் தமிழில் வெளியிடுவதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?